[2015 பிப்ரவரி 19

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அத்துடன் இந்த உறுப்பினர்களின் நடவடிக்கை குறித்து அவை உரிமைக் குழுவிற்கும் அனுப்பி வைத்து நடவடிக்கை எடுக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *(குறுக்கீடு) இதை நியாயப்படுத்துகிறீர்களா? தலைவரை அடிக்க வந்ததை நியாயப்படுத்திப் பேசப்போகிறீர்களா? (குறுக்கீடு) இருங்கள் பிறகு நான் கேட்டுக்கொள்கிறேன். இந்தத் தீர்மானத்தை அவையின் முடிவிற்கு விட்டுவிட்டு கேட்கிறேன். அவையினுடைய முடிவிற்கு தீர்மானத்தை விட்டுவிட்டுப் பேசலாம்.*

பேரவைத் தலைவரைத் தாக்க ஓடிவந்து என்னுடைய மேசையை விலக்கி, மிக மோசமாக வேண்டுமென்றே திட்டமிட்டு என்னைத் தாக்கும்விதமாக வந்து இவர்கள் செய்த நடவடிக்கை மிகவும் கண்டிக்கத்தக்கது. அவைக் காவலர்களைத் தாக்கியது, மிகவும் கண்டிக்கத்தக்கது. அவையே இதற்கு சாட்சியாக இருக்கிறது. ஆகவே, இன்றைக்கு அவை முன்னவர் அவர்கள் கொண்டுவந்திருக்கிற இந்தத் தீர்மானத்தை அவையினுடைய முடிவிற்கு விடுகிறேன்.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள் கொண்டுவந்த தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

5. தே.மு.தி.க. உறுப்பினர்கள் பேரவைப் பணிகளினின்று கூட்டத்தொடர் முழுவதும் தற்காலிக நீக்கம்– மறுபரிசீலனை செய்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. மு.க. ஸ்டாலின், சொல்லுங்கள்.*

திரு. மு.க. ஸ்டாலின்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சபையில் நடந்த சம்பவங்களைக் குறித்து அவை முன்னவர் அவர்கள் கொண்டு வந்திருக்கக்கூடிய அந்தத் தீர்மானத்தை நீங்கள் ஏற்றுக் கொண்டு, உங்களுடைய தீர்ப்பை*

இங்கு வழங்கியிருக்கிறீர்கள். அதற்காக அவையினுடைய ஒப்புதலையும் நீங்கள் பெற்றிருக்கிறீர்கள். எனவே நான் அதிலே குறுக்கிடுவதாக தயவுகூர்ந்து நீங்கள் கருதக்கூடாது. இருந்தாலும் திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் என்னுடைய கருத்தைத் தெரிவிக்க விரும்புவது, தொடக்கத்தில் ஆளுங்கட்சியினுடைய சட்டமன்ற உறுப்பினர் இங்கே பேசுகின்ற நேரத்தில் தேவையில்லாமல் . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அது முடிந்து போய்விட்டது. (குறுக்கீடு)*

திரு. மு.க. ஸ்டாலின்: *தேவையில்லாமல் ஒரு வார்த்தையைச் சொன்ன காரணத்தால்தான், தே.மு.தி.க.—வைச் சேர்ந்த சட்டமன்ற உறுப்பினர் அதற்கு பதில் சொல்லக்கூடிய வகையிலே அந்த வார்த்தை. . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் (குறுக்கீடு) இல்லை. அவை முன்னவர் அவர்கள் ஒரு தீர்மானம் கொண்டு வந்து, அது பேரவையிலே நிறைவேற்றப்பட்டுவிட்டது. நிறைவேற்றப்பட்டுவிட்டதை நீங்கள் பேசவேண்டாம் (குறுக்கீடு) நான் முடிவை அறிவித்துவிட்டேன். அதன்பிறகு நீங்கள் மேற்கொண்டு பேசுவது முறையல்ல. (குறுக்கீடு) மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. கடம்பூர் ராஜு அவர்கள் பேசும்போது யார் பெயரையும் குறிப்பிட்டு, எந்தவித ஆட்சேபகரமான வார்த்தைகளையும் பயன்படுத்தவில்லை. ஆனால், மாறாக தே.மு.தி.க. துணைத் தலைவர் திரு. அழகாபுரம் ஆர். மோகன்ராஜ் அவர்கள் பேசுகின்றபோது, குறிப்பிட்டே பேசினார். ** என்று குறிப்பிட்டுப் பேசினார். முதலில் பேசிய உறுப்பினர் யார் பெயரையும் குறிப்பிடாமல், மேலெழுந்தவாரியாக, ஆட்சேபகரமான கருத்துகள் இல்லாமல் வார்த்தைகளைப் பயன்படுத்தினார். அதில் ஆட்சேபத்திற்குரிய பகுதிகள் எதுவுமே இல்லை. ஆனால், இவர் நாங்கள் தெய்வமாக மதிக்கின்ற எங்களுடைய தலைவி (மேசையைத் தட்டும் ஒலி) இதய தெய்வம், மக்களின் முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களை*

** *மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது*

நேரடியாகக் குறிப்பிட்டு விமர்சிப்பதை இங்கே இருக்கிற எந்தத் தொண்டனாலும், யாராலும் தாங்கிக்கொள்ள முடியாது. ஆகவே, பெயரைக் குறிப்பிட்டுப் பேசியதற்கும், குறிப்பிடாமல் பேசியதற்கும் உள்ள வித்தியாசத்தை மாண்புமிகு தி.மு.க. சட்டமன்றக் கட்சித் தலைவர் அவர்கள் உணரவேண்டும். அவர் மூத்த உறுப்பினர், அனுபவம் பெற்றவர். அவர்கள் இந்த நியாயமான நடவடிக்கையை ஏற்றுக்கொள்வார்கள் என்று கருதுகிறேன். அவர்கள்மீது எடுத்த நடவடிக்கைக்கு இவர்கள் ஆட்சேபணை தெரிவித்தால், அவர்கள் நடந்து கொண்ட முறை சரி என்று இவர்கள் ஏற்றுக்கொள்கிறார்களா? *(குறுக்கீடு)*

நண்பகல் 12—00

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *திரு. மு.க. ஸ்டாலின், நீங்கள் அவையில் நடந்தவை அனைத்தையும் பார்த்துக்கொண்டுதான் இருந்தீர்கள். (குறுக்கீடு) தீர்மானம் நிறைவேறியதற்குப் பிறகு, அவைத் தலைவர் தீர்ப்பு சொன்னதற்குப் பிறகு, அதன்மீது நீங்கள் விமர்சனம் செய்யவேண்டாம். (குறுக்கீடு) நீங்கள் தீர்மானத்தின்மீது விமர்சனம் செய்யவேண்டாம், உட்காருங்கள். (குறுக்கீடு) அவையே நடந்தவற்றிற்கு சாட்சியாக இருக்கிறது. (குறுக்கீடு) அவை முன்னவர், விளக்கம் அளித்துவிட்டார், இதில் மேற்கொண்டு எதுவும் பேசவேண்டாம். (குறுக்கீடு) உங்கள் கட்சி உறுப்பினரைத்தான் பேச அழைக்கப்போகிறேன், நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. மு.க. ஸ்டாலின், அவர்கள். என்ன சொல்லுங்கள்.*

திரு. மு.க. ஸ்டாலின்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எந்தக் காரணத்தைக் கொண்டும் நான் உங்கள் தீர்ப்பில் குறுக்கிட விரும்பவில்லை. நீங்கள் அவர்களுக்கு அடுத்த கூட்டத்தொடர் வரை தந்திருக்கக்கூடிய தண்டனையைக் குறைத்து, அதை மறுபரிசீலனை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *சரி, உட்காருங்கள்.*

3. ஆளுநர் பேருரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின்மீது விவாதம்—தொடர்ச்சி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *ஆளுநர் பேருரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின்மீது விவாதம் தொடர்கிறது. மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.எஸ். சிவசங்கர் அவர்கள்.*